T. 19377

சந்மார்க்கபோதினி.

(ஒன்பதாம் பாகம்.)

ஹைஸ்கூல்

ஆறுவது வகுப்புக்கு ஏற்றது.

77

305

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

வித்தியாநுபாலன அச்சகம்

சென்னை.

விலை அணா 2.

சந்மார்க்க போதினி.

(ஒன்பதாம் பாகம்.)

ஹைஸ்கூல்

ஆருவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணு 2.

முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக்கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்து இந்நூல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டுகின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குந் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியாசாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தனஞு சித்திரைமீ.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

சந்மார்க்க போதினி.

ஒன்பதாம் பாகம்.

பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினிதாங் கினிதே
தெற்றவும் மேலாயார் சேர்வு.

இ - ள். இரந்துண்டாயினும் கற்றல் மிக வினிது, கல்விகள், நல்ல சபைமுன்னர் தமக்கு வந்துதவுதல் மிகவினிது, முத்தையொக்கும் நகையினையிடைய பெண்ணின் சொல் இனிது, அதுபோலத் தெளியவும் மேலா யாரைச் சேர்தல் இனிது. [முறுவல் - நகை.]

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தாள்
மனைவாழ்க்கை முன்னினிது மாணுதா மாயின்
நிலையாமை நோக்கிநோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தானினிது நன்கு.

இ - ள். பொருளுடையானது கொடை இனிது, மனையாள் உள்ளமும் நாயகன் உள்ளமும் மாறுபடாமல் பொருந்தின் மனவாழ்க்கை மிகவினிது, அவ்வாறு மாட்சிமைப்படாதாயின் நிலையாமையை ஆராய்ந்து நீட்டியாதே துறத்தல் மிகவினிது.

ஏவதுமாரு விளங் கிளைமை முன்னினிதே
நாளுநவை போகான் கற்றன் மிகவினிதே
ஏருடையான் வேளாண்மை தானினிதாங் கினிதே
தேரிற்கொள் நட்புத் திசைக்கு.

இ-ள். ஏவியதைச் செய்யும் இனம் சுற்றம் ஒருவற்கு மிகவினிது, குற்றங்கள் செய்யாமல் நாடோறும் கற்றல் மிகவினிது, ஏருடையான் வேளாண்மை இனிது, ஆராயின் தான் செல்லும் திசைக்கு அங்குள்ளாரின் நட்புக்கோடல் இனிது.

யானை யுடைப்படை காண்டல் மிகவினிதே
ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினிதாங் கினிதே
மான முடையார் மதிப்பு.

இ-ள். யானைகளையுடைய சேனையைக் காண்டல் மிகவினிது, பிறிது ஒன்றன் ஊனைத் தின்று தன் ஊனைப் பெருக்காமை மிகவினிது, காட்டியாற்றுக் கரைப்பக்கத்திலுள்ள ஊர் இனிது, அவைபோல மானமுடையார் நினைப்பு மினிது.

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னுகுதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

இ-ள். ஒருயிரைக் கொல்லாமை மிகவினிது, அரசன் செங்கோல் கோடிச் செய்யாமை இனிது, மற்றவன் செங்கோலனுகி அரசை அடைந்து நடாத்துந் திறமையால்

மிகவினிது, யாரிடத்தும் பொல்லாங்கு பேசா திருத்தல் மிகவினிது.

அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினும் தானடங்கா னாகுமேற்
கொண்டடை யானாக வினிது.

இ-ள். மறையவர்க்கு வேதம் உடைமை நிரம்ப மிகவும் இனிது, சுற்றமுடையான் படை கொண்டு செய்யும் ஆண்மை மிகவினிது, தந்தையேயாயினும் அவன் அடங்கானாயின் அவனைக் கொள்ளாவிடுதல் இனிது.

தங்கண் அமர்புடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

இ-ள். தம்மொடு சேர்ந்தவர் செல்வராய் வாழ்தல் மிகவினிது, அழகிய இடத்தை உடைய ஆகாயத்தின்கண் விரிந்த நிலாக்காண்டல் இனிது, குற்றமில்லாத செய்கையுடைய ராகி விரும்பியாவர்க்கும் அன்புடையராதல் இனிது.

கோனோக்கி வாழும் குடியெல்லாம் தாய்முலையின்
பானோக்கி வாழும் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழும் உலகம் உலகின்
விளிநோக்கி இன்புறாங் கூற்று.

இ-ள். குடிகளெல்லாம் அரசன் செங்கோலை நோக்கி வாழும், பிள்ளைகள் தாய்ப்பாலை நோக்கி வாழும், உலகமானது வானத்திலுள்ள

மழையை நோக்கி வாழும், இயமன் உலகின் இறப்பினை நோக்கி இன்புறுவான்.

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்கு
கற்றலின் வாய்த்த பிறவில்லை யெற்றுள்ளும்
இன்மையி னின்னா தில்லையில மென்னும்
அன்மையின் வன்பாட் டதில்.

இ-ள். ஒருவனுக்குச் செல்வம்போல வன்மையுடையது வேறொன்றுமில்லை. கற்ற கல்விபோல பயன்படுவன பிறபொருள்கள் இல்லை, எதனுள்ளும் வறுமைபோலக் கொடியதொன்றில்லை, யாதொரு பொருளும் இல்லோ மென்றிரக்கும் வன்மையைப்போல வலிமை யுடையது பிறிதொன்றுமில்லை.

நாக்கி னறிப வினியசுவை மூக்கினல்
மோந்தறிப வெல்லா மலர்களும்—நோக்குள்ளும்
கண்ணினற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்து
எண்ணின னெண்ணப் படும்.

இ-ள். இனிய சுவையை நாக்கினலறிவார்கள். எல்லா மலர்களின் வாசனையையும் மூக்கினல் மோந்து அறிவார்கள், அணியும் பொருள்களைக் கண்ணற் காண்பார்கள், ஆராயும் பொருள்களை அறிவுடையார் பலர் சேர்ந்து ஆராய்வார்கள்.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லர் இல்லகத் தூண்.

இ-ள். இளமைக் காலத்து நூல்களைக் கல்லாதொழிதல் குற்றம், வருவாய் இல்லாத

போது பிறர்க்கு உபகரிக்குந் தன்மை குற்றம், சுற்றத்தார் இல்லாத காலத்தில் பிறரோடு கோபித்தல் குற்றம், உறவினர் அல்லாதார் வீட்டில் உண் ணுதல் குற்றம.

வைகறை யாமந்து துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து—வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

இ-ள். வைகறையாகிய பின்யாமத்திலே துயிலெழுந்து தான் செய்யும் நல்லறத்தையும் ஒள்ளிய பொருளுக்கு வருவாயாகிய காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்துப் பொழுது விடிந்த பின் தந்தையையும் தாயையும் தொழுது எழுந்து ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். இது முந்தையோர் கண்ட முறை.

அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி.

இ-ள். அரசன், உவாத்தி, தாய், தந்தை, தனக்கு மூத்தோன் ஆகிய இவர்கள் பெரியவர் ஆவார்கள்; இவர்களைத் தேவரைப்போல் வணங்குதல் முறையாகும் என்பது எல்லாரா லும் காணப்பட்ட வழியாகும்.

சுடரிடைப் போகார் சுவர்மே லுமியார்
இடரெனினு மாசுணி கீழ்நம் மேற்கொள்ளார்
படைவரினு மாடை வளியுறைப்பப் போகார்
பலரிடை யாடை யுதரூரே யென்றுங்
கடனறி காட்சி யவர்.

இ-ள். ஒருவற்கும் விளக்கிற்கும் இடையே போகார், சுவரின்மேல் உமியார், பிறர் உடுத்த அழுக்கு உடையைக் கீழ்ப்படுப்பதும் மேற் போர்ப்பதும் செய்து கொள்ளார், படை வந்த தாயினும் தாம் உடுத்த ஆடைக் காற்று பிறர் மேல் உறைப்பப் போகார், பலர் நடு நின்று ஆடையை உதருர் அறிவுடையார். [மாசுணி - அழுக்காடை.]

நந்தெறும்பு தூங்கணம்புட் காக்கை யிவைபோலத்
தங்கரும நல்ல கடைபிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
ஏப்பெற்றி யானும் படும்.

இ-ள். ஆக்கமுள்ள எறும்பும் தூக்கணம் பறவையும் காக்கையென்று சொல்லப் பட்ட இவைகளின் செய்கையைப்போல நல்லன வாகிய தங்கருமத்தை சோராமற்கொண்டு கிடையாத காலத்தில் உணவிற்குரியவற்றைச் சேர்த்தலும், குளிர் காற்று முதலியவற்ருல் துன்பம் உருதவகையாக வீடுகட்டிக்கொள்ளுத லும், சுற்றத்தாரை விளித்துண்கையுமாகிய இக்கருமங்களைச் செய்பவர்க்கு இல்வாழ்க்கை யின் ஒழுக்கம் எத்தன்மையானும் சிறப்புறும்.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானி
னுண்ணிய கேளிர் பிறரில்லை—மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்ருளின்
என்ன கடவுளு மில்.

இ-ள். கண்போல மேம்பட்ட அவயவம் இல்லை, தம்மைக்கொண்ட நாயகனைப்போல

உறவினர் மகளிர்க்கு வேறொருவர் இல்லை, புதல்வரைப்போல அறிவுடைமையாகி நிறைந்த பிறபொருள் இல்லை, தன்னைப் பெற்றாள்போன்ற தெய்வமும் எத்தன்மையுள்ள தெய்வங்களுள்ளும் இல்லை.

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை.

இ-ள். தன்னை மெச்சிக்கொண்டு அகங்கரித்தலும், பணிவில்லாமல் வீணாகக் கோபத்தைப் பெருகச் செய்தலும் பிறருடையப் பல்வகைப்பட்ட பொருளையும் விரும்புகின்ற சிறுமையும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுடைய செல்வங்களை அழிக்கின்ற ஆயுதங்களாம்.

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி—கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை.

இ-ள். கணவனுடைய குறிப்பினை அறிந்து நடக்கின்றவள் மனைவியாவாள், தான் மேற்கொண்ட விரதங்களைச் செய்யும் விதிப்படி செய்கின்றவன் தவசியாவான், நல்லவைகளை உயிர்களுக்குச் செய்கின்றவன் அரசனாவான், இவர் மூவரும் மழை பெய்யென்று சொல்ல மழை பெய்யாநிற்கும்.

உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்
நட்பின் கொடுமுனை பொய்வழங்கி னில்லாகும்

செப்ப முடையார் மழையனையார் இம்மூன்றும்
செப்ப நெறிதூரா வாறு.

இ-ள். உப்பினது பெரிய குவியல் நீர் படிந்தால் இல்லாமல் போகும், சிநேகத்தின் ஆரம்பமானது பொய் சொன்னால் இல்லாமற் போகும், நடுவு நிலமையுடையவர் மேகம் போல் உபகரிப்பார், இம்மூன்றும் செம்மையுடைய வழியைத் தூராமைக்கு ஆதாரங்களாம்.

பாரதத் துள்ளும் பணையந்தந் தாயமா
சுரைம் பதின்மரும் போரெதிர்ந்து ஐவரோடு
ஏதிலா ராகி யிடைவிண்டார் ஆதலால்
காதலோ டாடார் கவறு.

இ-ள். மகா பாரதத்திலும் தமது பங்கே பந்தயமாக வைத்துச் சூதுபோர் செய்து, துரியோதனன் முதலிய நூற்றுவரும் தருமன் முதலாகிய ஐவரோடு நடுவில்லாமல் வேறுபட்டார், ஆகையால் யாவரும் சூதினை விரும்பியாடார்.

ஆற்று மிளமைக்கட் கற்கலான் மூப்பின்கட்
போற்று மெனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்கி யுல்குகொண் டாரில்லை யேயில்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

இ-ள். ஒருவன் சுமந்து மிகவும் வழியைக் கடந்து போகவிட்டுப் பின் தீர்வைப் பொருளைக் கொண்டவருமில்லை, ஓடத்தினின்றும் போகக் கரையேற்றிக் கூலிபெற்றவரும் இல்லை, அவைபோலத் தாம் கற்றற்குரிய நூல்

களை இளமைப் பருவத்தில் கல்லாதவன் முது மைப்பருவத்தில் கற்பான் என்று கூறுவதும் கூடுமோ கூடாது. [உல்கு - வரி.]

உணற்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

இ-ள். உண்ணுதற்கினிய உவர்ப்பில்லாத நீர் வேறு இடத்தில் இல்லையென்றெண்ணும் கிணற்றினிடத்துள்ள தவளைபோலக் கருதாமல், நாள்தோறும் வெறுப்பில்லாமல் இனிதாகப் படித்து ஒருநூலைக் கற்றலைக்காட்டிலும், கற்றறிந்தோர் வாயிலாகப் பலநூற்பொருளையும் கேட்டல் நல்லது.

மானமு நாணு மறியார் மதிமயங்கி
ஞான மறிவா ரிடைப்புக்குத்—தாமிருந்து
ஞானம் வினஅ யுரைத்தன கையாகும்
யானைப்பற் காண்பான் புகல்.

இ - ள். கல்லாதார் தமது மானமழிதலையும் நாணமழிதலையும் தெரியாராய், அறிவு மயங்கி அறிவு நூல்களைக் கற்றார்க்கிடையே புகுந்து யானையினது பல்லைப் பிடித்து காணப் புகுதல்போல அவ்வறிவுநூற்பொருளை அவரோடு வினவிக் கூறப்புகுதல் யாவர்க்கும் சிரிப்பைத் தரும்.

ஆயிரவ ரானு மறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்

பாயிரு ணிக்கும் மதியம்போற் பன்மீனும்
காய்கலா வாகு நிலா.

இ - ள். பல நட்சத்திரங்கள் திரண்டாலும் பரவிய இருளை ஓட்டுகின்ற ஒரு சந்திரனைப்போல் கிரணத்தை எதிர்க்கமாட்டாவாம், அதுபோலப் பெரிய உலகின்கண் அறிவிலாதவர் ஆயிரம் பேர் திரண்டாலும் அறிவுடையொருவனை ஒத்து விளங்கார்.

அறிவினுன் மாட்சி யொன்றில்லா வொருவன்
பிறிதினுன் மாண்ட தெவனும்—பொறியின்
மணிபொன்னுஞ் சாந்தமு மாலையு மின்ன
அணியெல்லா மாடையிற் பின்.

இ - ள். சாணையில் கழுவுதலுடைய இரத்தினமும் பொன்னும் சந்தனக்குழம்பும் பூமாலையும் இவைபோன்ற அணியும் பொருள்களெல்லாம் உடுக்கும் ஆடைக்குப் பிற்பட்டனவாம். அவைபோலக் கல்வியறிவினுல் பெருமை சிறிதும் இல்லாத ஒருவன் செல்வம் குலம் முதலிய பொருள்களால் மாட்சிமைப் படுதல் இல்லை.

பொலந்தா ரிராமன் துணையாகத் தான்போந்
திலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
பேர்ந்திறை யாய(தூஉம்) பெற்றுன் பெரியாரைச்
சார்ந்து கெழீஇ லாரில்.

இ - ள். இலங்கைக்கு உரியவனுகிய இராவணனுக்கு இளையவனுகிய விபீஷணன் பொன்மாலையை அணிந்த இராமமூர்த்தியைத் தனக்குத் துணையாக அடைக்கலம் புகுந்து அவ்

விலங்கை நகர்க்கே மீண்டும் அரசனுதலையும் அடைந்தான் ஆகலால் அறிவிற் பெரியவரைச் சேர்ந்து பயனடையாதவர் யாவர்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்கு நாமென்று.

இ-ள். தம்மைப் பார்க்கினும் எளியாரை நோக்கித் தமது பொருளுடைமை மிகவும் பெரிதென்று கருதி மனம் மகிழ்க. அதுபோலன்றித் தம்மைப் பார்க்கிலும் கற்றாரைப் பார்த்து நாம் கற்ற கல்வி எல்லா நூல்களையும் உணர்ந்த இவர்முன் எத்தன்மைத்தாம் என்று கருதி மனம் வருந்துக. [உடைமை-செல்வம்.]

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

இ-ள். தன்னைப் பிறர் நன்கு மதிக்கும் பொருட்டுத் தன்னை ஒருவன் புகழ்தல் தீ விளக்கை நல்ல நீரைச் சொரிந்து விளக்கஞ் செய்தாலொக்கும், சிற்றின்பத்தை விரும்பாது நடத்தல் அல்லவோ அழியா இன்பமாவது (அதுபோல்) தன்னை நன்கு மதியாது நடத்தல் அல்லவோ நன்கு மதிப்பாவது.

உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே உலகறியப்

பான்முளை தின்று மறலியுயிர் குடித்த
கான்முளையே சாலுங் கரி.

இ-ள். வருந்தலில்லாத முயற்சியை ஆதாரமாகக்கொண்டு போகுமூழ் வினையினது வன்மையைக் கெடுக்கும் வலிமையும் உண்டு. அதற்கு உலகத்திலுள்ளோர் அறிய ஊழ்வினையாகிய முளையைத்தின்று இயமனது உயிராகிய நீரைக் குடித்த மார்க்கண்டேயனே போதுமான சாட்சி. [பான்முளை - ஊழ்வினையாகிய முளை. கரி - சாட்சி.]

தெரிவி லிளமையுந் தீப்பிணியு மூப்பும்
பிரிவுந் துயிலு மொரீஇப்—பருவந்து
பத்துஎட்டு நாளைப் பயனிலா வாழ்க்கைக்கு
வித்துக் குற்றுண்பார் பலர்.

இ-ள். தெரிதலில்லாத இளமையும் கொடிய நோயும் விருத்தாப்பியமும் பிரிதலும் நித்திரையும் நீங்கித் துன்புற்று பத்து அல்லது எட்டுநாள் வாழ்க்கைக்கு விதையைக் குற்றி உண்பவரும் பலர். [வித்துக்குற்றுண்பவர் - விதைக்கு வைக்கப்பட்டதைக் குற்றியுண்பவர்.]

பிரகடன பத்திரம்.

	ரூ.	அ.	பை.
முதற்பாலபாடம்	0	3	0
இரண்டாம்பாலபாடம்	0	5	0
மூன்றும்பாலபாடம்	0	10	0
நான்காம்பாலபாடம்	1	4	0
நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினுக்களும்	1	12	0
முதற்சைவவினுவிடை	0	3	0
இரண்டாஞ்சைவவினுவிடை	0	10	0
திருக்குறள் மூலம்	0	8	0
திருவள்ளுவர் பரிமேலழகருரை	5	0	0
நன்னூல் மூலம்	0	3	0
நன்னூல் விருத்தியுரை	3	8	0
நன்னூற்காண்டிகையுரை	3	8	0
இலக்கணச்சுருக்கம்	1	0	0
இலக்கணவினுவிடை	0	3	0
இலக்கணக்கொத்துரை தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறுவளி	1	8	0
தொல்காப்பியம் சேனுவரையம்	3	[illegible]	[illegible]
பெரியபுராண வசனம்	2	[illegible]	[illegible]
சிதம்பரமான்மியம்	0	[illegible]	[illegible]
சிவஞானபோதம் சிவஞானமுனிவர் சிற்றுரை	1	4	0
திருக்கோவையாருரை	3	0	0
ஆறுமுகநாவலர் சரித்திரம்	1	4	0

T1
R0

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,

வித்தியாநுபாலனயந்திரசாலை,

நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.